# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் “A+” தரச் சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**

முனைவர் சு. ஸ்ரீனிவாசராகவன் , எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்.சி., பி.எச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ.)

அலுவலகம் : 0431-2407016,2407060
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க.எண்: 102/A3/தே.நெ.அ./ம.பி.2/நவம்பர் 2021 நாள்: 05.10.2021

**பெறுநர்:**

கல்லூரி முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்துக் கல்லூரிகள் (Non – Autonomous)

அன்புடையீர்,

பொருள்: நவம்பர் 2021 – சிறப்புப் பாடங்கள் - தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி – ஆசிரியர்கள் பெயர் பட்டியல் கோருவது – தொடர்பாக.

------

பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளத்தில் https://www.bdu.ac.in/examinations/ugved.php என்கிற இணைப்பில் காணப்பெறும் படிவத்தை பதிவிறக்கம் செய்து அதில் நவம்பர் 2021 பருவத்திற்கு தங்கள் கல்லூரியில் கீழே குறிப்பிட்டுள்ள சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பூர்த்தி செய்து 25.10.2021-க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| Subject Code | Title of the Paper |
|---|---|
| 18UGVED | Value Education |
| RUGSDC | Soft Skills Development |

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக்கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. **சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும்** அவர்களின் பணிமூப்பு (Serniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாக பரிந்துரைக்க வேண்டாம்.

2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.

3. **ஆசிரியர்களின் எண்ணிக்கை (அனைத்துத் துறைகளையும் சேர்த்து துறைக்கு இருவர் வீதம்) இருபதுக்கு (20) மிகாமல் இருக்க வேண்டும். 20-க்கு மேல் இடம்பெற்றுள்ள பெயர்கள் கருத்தில் கொள்ள இயலாது.**

4. பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து https://www.bdu.ac.in/examinations/ugved.php பதிவிறக்கம் செய்யப்பட்ட MS-EXCEL FORMAT-ல் பூர்த்தி செய்து confidential2@bdu.ac.in என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு 25.10.2021-க்குள் அனுப்பி வைக்கவும். பதிவிறக்கம் செய்யப்படாத MS-EXCEL FORMAT-ல் பெறப்படும் மென் நகலினை (Soft Copy) ஏற்றுக் கொள்ள இயலாது. மேலும் மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினை கல்லூரி முதல்வரின் கையொப்பமிட்டு அஞ்சல் வழியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு 25.10.2021-க்குள் அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்டவாறு அனுப்பி வைக்கப்படாத பட்டியல்கள்/காலந்தாழ்ந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நவம்பர் 2021 தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாக தங்களது ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்வு நெறியாளர்(பொ.)**